# 10 வகையான ‘நலன் காக்கும் ஸ்டாலின்’ சிறப்பு போட்டிகள்!

முதல் பக்கத் தொடர்ச்சி

செலவிலிருந்து தப்பியது போன்ற அனுபவங்களை உணர்வுப் பூர்வமாகப் பதிவு செய்யலாம்.

**படைப்பு வடிவம்:**

● ரீல்ஸ்: ஒரு நிமிடத்திற்குள் அடங்கும் வகையில் ஒரு காணொலி. இதில், உங்கள் அனுபவத்தை சுருக்கமாகவும், தெளிவாகவும் விளக்க வேண்டும்.

● கட்டுரை: ஒரு பக்கக் கட்டுரை. இதில், உங்கள் அனுபவத்தின் அனைத்து விவரங்களையும், அது உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றத்தையும் விரிவாக எழுதலாம்.

2. ஆரோக்கியத்தின் திருவிழா புகைப்படப் போட்டி

“நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாம்கள் நடைபெறும் இடங்களுக்கு நேரில் சென்று, அங்கு மக்கள் பயனடையும் விதத்தையும், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் அர்ப்பணிப்பான சேவையையும், முகாமின் நேர்மறைச் சூழலையும் வெளிப்படுத்தும் வகையில் புகைப்படங்கள் எடுக்க வேண்டும். ஒரு புகைப்படம், ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம் என்பதை நிரூபிக்கும் சிறந்த படைப்புக்கு பரிசுகள் உண்டு.

முகாமின் செயல்பாடுகளைக் கலைநயத்துடன் காட்சிப்படுத்தி, திட்டத்தின் தாக்கம் மற்றும் பயன்களை மக்களுக்கு உணர்த்துவதே இதன் முக்கிய நோக்கம்.

3. உண்மைக்கு உயிர்கொடு குறும்படப் போட்டி:

“நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாமால் பயனடைந்த ஒருவரின் உண்மைக் கதையை 3 முதல் 5 நிமிடங்களுக்குள் குறும்படமாக உருவாக்க வேண்டும்.

இதில் பயனாளிகள், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் முகாம் மருத்துவர்களின் நேர்காணல்களைச் சேர்த்து, திட்டத்தின் தாக்கத்தை உணர்வுப்பூர்வமாகப் பதிவு செய்யலாம்.

4. வரிகள் பேசட்டும் விழிப்புணர்வு முழக்கம் :

“நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாமைப் பற்றியும், வருமுன் காப்பதன் அவசியம் குறித்தும் மக்கள் மனதில் எளிதில் பதியும் வகையில் வலிமையான விழிப்புணர்வு முழக்கங்களை (Slogans) எழுதி அனுப்ப வேண்டும்.

எடுத்துக்காட்டு: “உங்கள் உடல் நலம், உங்கள் கையில்!”

5. அறிவோடு விளையாடு : வினாடி - வினா போட்டி:

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டம், ஆரோக்கியமான வாழ்க்கை முறை மாற்றங்கள், நோய்த்தடுப்பு மருத்துவம் மற்றும் பொது சுகாதார விழிப்புணர்வு பற்றிய உங்கள் அறிவைச் சோதித்துக்கொள்ள ஒரு வாய்ப்பு.

இது வெறும் போட்டியல்ல, மாறாக மக்கள் தங்களின் ஆரோக்கியம் குறித்த அறிவை வளர்த்துக்கொள்ளும் ஒரு ஊடகமாக இந்தப் போட்டி அமைகிறது.

6. பாரம்பரியமும் ஆரோக்கியமும் சமையல் போட்டி :




மக்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில், சத்தான மற்றும் பாரம்பரிய உணவு வகைகளை எளிமையான முறையில் சமைத்து, அதன் செய்முறை விளக்கத்தை 1 நிமிட ரீல்ஸ் ஆக பகிர வேண்டும்.

பாரம்பரிய தானியங்கள், காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்கள் போன்றவற்றை எவ்வாறு அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளலாம் என்பதை இந்த வீடியோக்கள் வாயிலாக விளக்கலாம். இது பொதுமக்கள் மத்தியில் ஆரோக்கியமான உணவுப் பழக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

7. எண்ணங்களும் வண்ணங்களும் ஓவியப் போட்டி

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தின் முக்கியத்துவத்தையும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் கலை வடிவமாக வெளிப்படுத்தும் தனித்துவமான ஓவியப் போட்டி இது.

கருப்பொருள்கள்: “ஆரோக்கியமான தமிழ்நாடு”

இந்தக் கருப்பொருள்களில் உங்கள் எண்ணங்களை வண்ணங்களாலும் கோடுகளாலும் படைக்கலாம்

8. உங்களின் உரத்த குரல் பாட்காஸ்ட் போட்டி:

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தைப் பற்றிய உங்கள் கருத்துக்களையும், அதன் தாக்கம் பற்றிய தகவல்களையும் 2 நிமிடங்களுக்குள் பாட்காஸ்ட்டாகப் பதிவு செய்து அனுப்ப வேண்டும்.

இந்தத் திட்டத்தைப் பற்றிய உங்கள் தனிப்பட்ட கருத்துக்களைப் பேசலாம் அல்லது பயனாளிகள் மற்றும் மருத்துவர்களின் நேர்காணல்களைப் பதிவு செய்யலாம். இது கேட்பவர்களுக்குத் திட்டத்தின் பலன்களை விரிவாகப் புரிய வைக்கும்.

9. மக்கள் குரல்: அடுத்த சுகாதாரத் திட்டம் என்ன?

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தின் வழியில், தமிழ்நாட்டின் பொதுச் சுகாதாரத் துறையில் நீங்கள் காண விரும்பும் அடுத்த முக்கியத் திட்டம் என்ன? அல்லது தற்போதைய திட்டங்களில் (எ.கா: காப்பீட்டுத் திட்டம், ஆரம்ப சுகாதார நிலையங்கள்) நீங்கள் அவசியம் செய்ய வேண்டும் என்று கருதும் முக்கிய மேம்பாடுகள் யாவை? என்பது குறித்த உங்கள் ஆக்கப் பூர்வமான கருத்துக்களைப் பதிவு செய்யுங்கள்.

எவ்வாறு அனுப்ப வேண்டும்? உங்கள் திட்ட யோசனையைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் விளக்கும் வகையில், அதிகபட்சம் 500 வார்த்தைகளுக்குள் ஒரு பத்தி (Paragraph) வடிவில் எழுதி அனுப்ப வேண்டும்.

10. வண்ணங்களில் விடியல் போஸ்டர் வடிவமைப்பு போட்டி!

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தின் முக்கியத்துவத்தை, வருமுன் காக்கும் மருத்துவத்தின் தேவையை, அல்லது ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் நன்மைகளை எடுத்துரைக்கும் வகையில், உடனடி தாக்கம் செலுத்தும் சுவரொட்டிகளை(Posters) வடிவமைக்கவும்.

**படைப்பு வழிகாட்டி:**

எளிமையான கிராபிக்ஸ் மற்றும் வலிமையான, கவர்ச்சியான வாசகங்களைப் (Slogans) பயன்படுத்துங்கள்.

போட்டியில் கலந்து கொள்பவர்கள் தங்கள் படைப்புகளைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் 05/12/2025 தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

1. மின்னஞ்சல்: உங்கள் படைப்புகளை tndiprmhnks@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

2. விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code): கீழே உள்ள [QR Code] குறியீட்டை ஸ்கேன் செய்தும் உங்கள் படைப்புகளைச் சமர்ப்பிக்கலாம்.

3. வாட்ஸ்அப் எண் (Whatsapp No): ஊடக மையத்தின் வாட்ஸ் அப் எண் 9498042408க்கு ஒரு ‘ஹாய்’ (Hi) அனுப்பி லிங்கை பெறுங்கள்

## மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் தேர்தல் ஆணையம்

# ‘மக்களாட்சி புதைக்கப்படவில்லை’ என்ற நம்பிக்கையை துளிர்க்க வைக்குமா?

### ராகுல்காந்தி எம்.பி. வெளியிட்ட ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி – முதல்வர் வலைதளப் பதிவு!

சென்னை, நவ.7 -

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05-11-2025) வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**திருடப்படும் மக்கள் தீர்ப்பு; வாய்திறக்காத தேர்தல் ஆணையம்!**

**அண்மைக்காலமாக பா.ஜ.க. பெற்று வரும் தேர்தல் வெற்றிகளின் உண்மைத்தன்மை குறித்து மீண்டுமொரு முறை பெரும் ஐயம் எழுகிறது. ஹரியானாவில் நடைபெற்றுள்ள வாக்குத் திருட்டு குறித்து எனது சகோதரரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல்காந்தி அவர்கள் வெளியிட்டுள்ள ‘பச்சையான ஆதாரங்கள்’ அதிர்ச்சியூட்டுகின்றன.**

**வெறுப்பினை மூட்டி, பொய் வாக்குறுதிகளைக் கூறி 2014-இல் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க.வின் பிளவுவாத அரசியலை மக்கள் இனியும் நம்பத் தயாராக இல்லை என்ற நிலை எப்போதோ ஏற்பட்டுவிட்டது.**

**ஆகையால் தேர்தலில் முறைகேடுகள் என்பதையெல்லாம் தாண்டி, வாக்காளர் பட்டியலிலேயே அப்பட்டமான அட்டூழியத்தை அரங்கேற்றி, மக்களின் ஜனநாயகத் தீர்ப்பைக் களவாண்டு, இன்று அம்பலப்பட்டு நிற்கிறது.**

**இதன் அடுத்தகட்டம்தான் SIR என்ற பெயரில் மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதி என்பதற்கு பீகாரும், இன்று வெளியாகியுள்ள #HaryanaFiles-உமே சான்று!**

**இவை அனைத்துக்கும் பொறுப்பான தேர்தல் ஆணையம் இத்தனை குற்றச்சாட்டுகள், அடுக்கடுக்கான ஆதாரங்களோடு முன்வைக்கப்பட்டும் எந்த ஒரு முறையான விளக்கமும் அளிக்காமல் இருப்பது வேதனையளிக்கிறது.**

**மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் தேர்தல் ஆணையம் மக்கள் மன்றத்தில் உரிய பதில் சொல்லி, இந்தியாவில் மக்களாட்சி முழுவதும் குழிதோண்டிப் புதைக்கப்படவில்லை என நம்பிக்கையைத் துளிர்க்க வைக்குமா?**

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி தலைமையில்

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அண்ணா அறிவகம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

*நாமக்கல், நவ. 7-*

*திருச்செங்கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதி இல்லத்தில் பொது மக்களுக்கு எஸ்.ஐ.ஆர். வாக்காளர் படிவம் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்க உதவிக்கான அலுவலகம் அண்ணா அறிவகம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.*

*விழாவில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.எஸ். மூர்த்தி தலைமை தாங்கினார்.*

*மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு அண்ணா அறிவகத்தை திறந்து வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அருள்ஜோதி, துணை ஒருங்கிணைப்பாளர்கள் பரசுராமன் கவிப்பிரியா, ஷேக் மீரான், வடிவேல், தினேஷ்குமார், நானா நானி கார்த்தி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

# நேர்நிற்கும் நெஞ்சுறுதியின் பெயர் ஸ்டாலின்!

**1976** பிப்ரவரி 1- அதற்கு முதல்நாள் வீடு தேடி வந்து தன் மகனைக் கைது செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போயிருந்த போலீசுக்கு போன் செய்து, “கட்சிப் பிரச்சார நாடகத்தை முடித்துவிட்டு வெளியூரிலிருந்து என் மகன் வந்துவிட்டான். நீங்கள் வந்து கைது செய்யலாம்” என்கிறார் கலைஞர். போலீஸ் வருகிறது. மு.க.ஸ்டாலினை கைது செய்கிறது. மிசா சட்டத்தின் கீழ் சென்னை மத்திய சிறையில் கடும் சித்திரவதைகளை எதிர்கொண்டு, ஓராண்டு சிறைவாசம் கண்டவர் ஸ்டாலின். அவர் காரில் ஏறி, ஃப்ளைட் பிடித்து ஓடி ஒளிந்து பண்ணை வீட்டுக்குள் பதுங்கிக் கொள்ளவில்லை. இளைஞராக சிறை சென்று, எதிர்காலத் தலைவராக வெளியே வந்தார் ஸ்டாலின்.

2001 ஜூலை 1- முதல் நாள் நள்ளிரவில் கலைஞரை போலீசார் இழுத்து, தாக்கிக் கைது செய்கிறார்கள். நாடே பதைபதைக்கிறது. தன் சகோதரியின் பெங்களூர் வீட்டிற்குச் சென்றிருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் விரைந்து சென்னை திரும்புகிறார். அவர் மீதும் வழக்குப் போடப்பட்டிருந்தது. அன்று சனிக்கிழமை நீதிமன்ற விடுமுறை நாள் என்பதால், முதன்மை செஷன்ஸ் மாஜிஸ்ட்ரேட்டின் வீட்டிற்கே சென்று நேர் நிற்கிறார். ரிமாண்ட் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. “இது பொய் வழக்கு.. இதை முறியடிப்போம். நான் பார்க்காத ஜெயிலா?” என்று மன உறுதியுடன் தெரிவித்துவிட்டு, சிறைக்குச் செல்கிறார். மேம்பால ஊழல் என்ற பெயரில் ஜெயலலிதாவின் வன்மத்திற்காக அ.தி.மு.க. ஆட்சியில் காழ்ப்புணர்வுடன் போட்ட அந்த வழக்கில், குற்றப்பத்திரிகைகூட சரியாகத் தாக்கல் செய்ய முடியாமல் நீதிமன்றத்தில் அவமானப்பட்டது அ.தி.மு.க. அரசுதான். மேயராக ஸ்டாலின் கட்டிய மேம்பாலங்கள் இன்றும் மக்களுக்குப் பயன்படுகின்றன.

**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்



2011 டிசம்பர் 3- தி.மு.க.வினரைப் பழிவாங்கும் எண்ணத்துடன் நில அபகரிப்பு சட்டத்தைக் கொண்டு வந்தது ஜெயலலிதா அரசு. முன்னாள் அமைச்சர்கள் உள்பட பலரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் ஒரு நில அபகரிப்பு குற்றச்சாட்டு, அது தொடர்பாக கொலை மிரட்டல் என 5 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்தது அ.தி.மு.க. அரசு. வழக்கின் முழு விவரமறியவும், தன் தரப்பிலான விளக்கத்தை அளிக்கவும், தேவையென்றால் போலீசார் தன்னை கைது செய்யட்டும் என்றும் காவல்துறை தலைமையிடமான டி.ஜி.பி. அலுவலகத்திற்கு நேரில் வந்தார் மு.க.ஸ்டாலின். அவர் ஓடி ஒளியவில்லை.



Son of former Tamil Nadu Chief Minister M. Karunanidhi and Mayor M. K. Stalin at the house of Principal Sessions Judge on Saturday.

ஸ்டாலின் வருகிறார் என்று தெரிந்ததும் டி.ஜி.பி.தான் பின்வாசல் வழியாக அவசரமாக ஓடினார். அதற்கடுத்த நிலையிலிருந்த அதிகாரிகள், ‘உச்சா வருது சார்..’ என்ற ரீதியில் ஒவ்வொருவராக அங்கிருந்து கிளம்பினர். வாசலில் ஊடகங்கள் காத்திருந்தன. “என் மீது சுமத்தப்பட்டுள்ள நில அபகரிப்பு குற்றச்சாட்டு பொய்யானது. புகார் தந்தவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இங்கிருந்த அதிகாரிகளிடம் தெரிவித்து விட்டு வந்துள்ளேன்” என்றார்.

2012 ஏப்ரல் 25 அன்று சட்டமன்றத்தில் அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, “ஸ்டாலின் உள்ளிட்டோர் மீதான புகாரை வாபஸ் பெறுவதாக புகார்தாரர் தெரிவித்ததால், அதனடிப்படையில் ஸ்டாலின் மீதான வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதனால்தான் ஸ்டாலின் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை” எனத் தெரிவித்தார். உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து ஜெயலலிதா அரசு உச்சநீதிமன்றம் சென்றது அங்கும் மு.க.ஸ்டாலின் மீதான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஜெயலலிதாவின் பழிவாங்கும் நடவடிக்கையை சட்டரீதியாக முறியடித்து, ஜெயலலிதா வாயாலேயே அதை சட்டமன்றத்தில் சொல்ல வைத்தவர் இன்றைய முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்.

ஒரு முறையல்ல.. ஒவ்வொரு முறையும் ஒன்றிய-மாநில அரசுகளின் பழிவாங்கும் நோக்கிலான வழக்குகளை ஓடி ஒளியாமல் நேர் நின்று எதிர்கொள்ளும் நெஞ்சுறுதி மிக்க வரலாற்றுத் தலைவர் மு.க.ஸ்டாலின்.

## வடக்கு மண்டல கழகப் பொறுப்பாளர் - அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு!

# வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 3 சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

*வேலூர், நவ. 7 -*

*வேலூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட வேலூர், அணைக்கட்டு மற்றும் குடியாத்தம் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளில் நியமனம் செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) கூட்டம் இன்று (07.11.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு வேலூர் மாநகராட்சி அலுவலகம் அருகில் அமைந்துள்ள பேபி மகாலில் நடைபெற உள்ளது.*



*இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சரும், வடக்கு மண்டல கழகப் பொறுப்பாளருமான எ.வ. வேலு கலந்துகொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) குறித்து தக்க ஆலோசனைகளை வழங்க உள்ளார்.*

*எனவே நடைபெற உள்ள ஆலோசனைக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி OTN ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) ஆகியோர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

*மேற்கண்டவாறு வேலூர் தெற்கு மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.*